கடலூர் மாவட்ட கூடுதல் ஆட்சியர்(வருவாய்) அவர்களின் செயல்முறை ஆணைகள்.
பிறப்பிப்பவர்: திரு.ரஞ்ஜீத் சிங்,இ.ஆ.ப.,

ந.க.அ4/29511/2019

நாள்: 15.02.2022

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி-கருணை அடிப்படையில் பணி நியமனம் - கடலூர் மாவட்ட வருவாய் அலகு-திரு.ம.மனோஜ் பிரபாகர் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது - இளநிலை உதவியாளர் நிலையில் பணியை வரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் தொடங்கியும் ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்: 42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்: 12.03.2007.
2) அரசாணை (நிலை) எண்: 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்: 26.02.2021
3) கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சென்னை அவர்களின் ஆ.கு.3/18395/2020, நாள்: 22.11.2021.
4) மாவட்ட கூடுதல் ஆட்சியர்(வருவாய்),கடலூர் அவர்களின் உத்தரவு நாள்: 15.02.2022

---------

ஆணை:

பார்வை 2-இல் காணும் அரசாணை (நிலை) எண்: 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்: 26.02.2021 இன்படி 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதி தளர்வும் தேவைப்படாத பணியாளார்களுக்கு சம்பந்தப்பட்ட பணி நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒருநிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the Appointing Authority)அவரவர் கட்டுப்பாட்டின் கீழுள்ள பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும் எனவும், இது தொடர்பாக அரசின் இசைவு/நடவடிக்கை ஏதும் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) அதனடிப்படையில் கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணை எண் ந.க.அ4/04/2018 நாள்: 12.07.2018 இன்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, 18.07.2018 மு.ப முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்துவரும் திரு.ம.மனோஜ் பிரபாகர் என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் அவர் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு கீழ்காணுமாறு பணி வரன்முறை செய்தும், தகுதிகாண் பருவத்தை அதே நாளில் தொடங்கியும் இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | மாவட்ட ஆட்சியர் கடலூர் அவர்களின் பணிநியமன ஆணை எண்(ம) நாள் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.ம.மனோஜ் பிரபாகர், இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், காட்டுமன்னார் கோயில். | அ4-04-2018, 12.07.2018 | 18.07.2018மு.ப | 18.07.2018முப | 18.07.2018மு.ப |

3)மேற்காணும் அட்டவணையில் கண்டுள்ள இளநிலை வருவாய் ஆய்வாளரின் பணிவரன்முறை தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: தனியரின் அசல் சான்றுகள்

ஒம்/- ரா.டெய்சிகுமார் .
கூடுதல் ஆட்சியருக்காக (வருவாய்)
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது), கடலூர்.

பெறுநர்
உரிய நபர்
-உரிய அலுவலர் மூலமாக

உ.ந.உ.ப.-

அலுவலக மேலாளர் (பொது)

நகல்: வருவாய் வட்டாட்சியர், காட்டுமன்னார் கோயில்
-உரிய நடவடிக்கை மேற்கொள்ள